


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 350 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 14 – ஞாயிற்றுக்கிழமை 30 ஜூலை 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 350 : Thiruvalluvar Year - 2054 - Aadi 14 - Sunday 30 July 2023 - Chennai 12 Pages ₹ 5.00


### தமிழ்நாட்டில் பாத யாத்திரையைத் தொடங்கி வைக்கும் அமித்ஷா - பற்றி எரியும்

# மணிப்பூருக்குச் சென்று அமைதி யாத்திரை நடத்தத் தயாரா?

## கழக இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, ஜூலை 30-**

**“இலங்கைப் பிரச்சினை பற்றி பேச அமித்ஷாவுக்கு உரிமை கிடையாது; தமிழ்நாட்டில் பாதயாத்திரையைத் தொடங்கி வைக்கும் அமித்ஷா, பற்றி எரியும் மணிப்பூரில் அமைதி யாத்திரை நடத்தத் தயாரா?” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றும் போது கேள்வி எழுப்பினார்.**

சென்னை அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற கழக இளைஞரணி மாவட்ட - மாநில - மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் கலந்து கொண்டு, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

ஒருவருக்கு எத்தனை வயதானாலும் சொந்த வீட்டுக்குத் திரும்ப வரும் போது, சொந்த ஊரில் கால் வைக்கும் போது ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். அந்தப் புத்துணர்ச்சியோடு நான் இப்போது வந்திருக்கிறேன்.

இப்போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இளைஞரணியின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களான உங்களை எல்லாம் இங்கு பார்க்கும்போது, அதே மகிழ்ச்சியைத்தான் புத்துணர்ச்சியைத்தான் நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

**இங்கு இளமையாக உணர்கிறேன்! எல்லாப் புகழும் இளைஞரணிக்கே!**

இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால், நான் இப்போது மிகவும் இளமையாக உணர்கிறேன். வயது 70. ஆனால் 20 மாதிரி நான் இங்கே நிற்கிறேன். இளமைக்கே உரிய அந்த வேகம் திரும்புகிறது. எல்லாப் புகழும் இந்த இளைஞரணிக்குத்தான்!

இங்கே நம்முடைய பொருளாளர் சொன்னாரே, மதுரை ஜான்சி ராணி பூங்காவில் தலைவர் கலைஞருடைய தலைமையில் நடந்த விழாவில் நாங்கள் இந்த இளைஞரணியை உருவாக்கினோம் என்று!

அன்றைக்கு வந்த இளைஞர்கள் எப்படிப்பட்ட நெஞ்சுறுதி யோடு, முக மலர்ச்சியோடு இருந்தார்களோ - அந்த நெஞ்சுறுதியை மலர்ச்சியை, எழுச்சியை உங்களிடம் பார்க்கிறேன்.

**இளைஞரணிக்குப் புதுரத்தம் பாய்ச்சுகிறார், தம்பி உதயநிதி!**

நீங்கள் ‘இளவட்டங்கள்’ அல்ல; கழகத்தினுடைய ‘இளம் ரத்தங்கள்’! உங்களுக்குப் பொறுப்புகள் வழங்கி, கழகத்துக்குப் புதுரத்தம் பாய்ச்சியிருக்கிற இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

## உதயநிதியே உங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும்!
## நீங்கள் எல்லோருமே உதயநிதி மாதிரி செயல்படவேண்டும்!

மொத்தம் உள்ள 72 மாவட்டக் கழகங்களில் இளைஞரணி சார்பில் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் எனப் பொறுப்புகளைக் கேட்டு விண்ணப்பித்த 4 ஆயிரத்து 158 பேரில் இருந்தும், தம்பி உதயநிதி அவர்கள் அனைத்து நகரங்களில் இருந்து நேர்காணல் (Interview) நடத்தி, அதில் தேர்வாகி, 609 பேர் இளைஞரணிப் பொறுப்புகளுக்கு பொறுப்பாளர்கள் இங்கு நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

**உங்கள் உழைப்புக்குக் கிட்டிய அங்கீகாரமே இப்பதவி!**

இந்தப் பொறுப்பு ஏதோ உங்களுக்கு சாதாரணமாகக் கிடைத்துவிடவில்லை. உங்கள் உழைப்புக்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரம் இது! இதை நீங்கள் பொறுப்பாக காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

அடிக்கடி நான் சொல்வதுண்டு. இது பதவியல்ல, பொறுப்பு. நான் பல நேரங்களில் சொல்லியிருக்கிறேன். கலைஞர் அவர்கள், நான் மேயராகப் பொறுப்பேற்றபோது, அந்த மேயருக்குரிய முதல் பேச்சைத் தயாரித்து கலைஞரிடம் கொண்டு சென்று காண்பித்தபோது, என்னுடைய பேச்சில் இரண்டு திருத்தங்களைச் செய்தார். அதில் நான். ‘மேயர் பதவி’ என்று இரண்டு இடத்தில் போட்டிருந்தேன். அந்தப் பதவியை அடித்து விட்டு, ‘பொறுப்பு’ என்று மாற்றினார். மாற்றிவிட்டுச் சொன்னார், “ஏன் மாற்றினேன் தெரியுமா? இது உனக்குக் கிடைத்திருக்கும் பதவியல்ல, இது உனக்குக் கிடைத்திருக்கும் பொறுப்பு. நீ பொறுப்போடு பணியாற்ற வேண்டும் என்று கூறினார்”. எனவே அதைத்தான் நான் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

2019 ஜூலை 4ஆம் தேதி கழகத்தின் இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்பேற்றது முதல், தம்பி உதயநிதி அவர்கள் பல்வேறு மகத்தான சாதனைகளைச் செய்து வருகிறார்.



தி.மு.க. இளைஞர் அணியில் புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட – மாநில – மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம், நேற்று (29.7.2023–சனிக்கிழமை), சென்னை, அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, புதிய இளைஞர் அணி நிர்வாகிகளை வாழ்த்திச் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

**இளைஞரணியின் பணிகள்! பட்டியல் கண்டு மலைத்தேன்!**

இந்த நிகழ்ச்சிக்கு என்னிடம் தேதி கேட்டபோது இளைஞரணியின் செயல்பாடுகளைப் பற்றி அவரிடம் நான் கேட்டேன்.

அவர் சொன்ன பட்டியலைக் கேட்டு எனக்கே மலைப்பாகிவிட்டது. அதில் சிலவற்றை மட்டும் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அதாவது, 30 லட்சம் உறுப்பினர்களை இளைஞரணிக்குச் சேர்த்து, கழகத்தின் வலிமையை இன்னும் கூட்டியிருக்கிறார்.

2019 எலக்‌ஷனுக்கு முன்பே, ஊராட்சி சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் சுற்றிச் சுழன்று பிரச்சாரம் செய்திருக்கிறார்.

அவர் காட்டிய ஒற்றைச் செங்கல் உங்களுக்கு ஞாபகமிருக்கும் என்று நினைக்கிறேன். எப்படி மறக்க முடியும்? நம்முடைய எதிரிகளாலேயே அதை மறக்க முடியவில்லை. இன்னும் அதை நினைத்து புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நீர்நிலைகளைத் தூர் வாருவது, நம்முடைய இயக்கம் மீது காலம் காலமாக எதிரிகள் பரப்புகிற அவதூறுகளை முறியடிக்க ‘பொய்ப்பெட்டி’ நிகழ்ச்சி நடத்தியது, கொரோனா காலத்தில் நிவாரணப் பணிகளில் இளைஞரணியை ஈடுபடுத்தி, பொதுப் பணிகள், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தது மட்டுமல்ல, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய முறைகேட்டைக் கண்டித்தும் போராட்டம் நடத்தினார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### கள நிலவரத்தை ஆய்வு செய்ய

## எதிர்க்கட்சிகளின் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் மணிப்பூர் பயணம்!

*புதுடெல்லி, ஜூலை 30 -*

மணிப்பூரில் 2 மாதங்களுக்கு மேலாக கலவரம் நீடித்து வருகிறது. மணிப்பூரில் மெய்தி, குக்கி இனக் குழுக்களுக்கு இடையே கடந்த 2 மாதங்களுக்கு மேலாக வன்முறை நீடித்து வருகிறது. கடந்த மே 3ம் தேதி தொடங்கிய இந்த வன்முறையில் இதுவரை 150க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வன்முறையை கட்டுப்படுத்த துணை ராணுவம் குவிக்கப் பட்டுள்ளது.



இதனிடையே, மணிப்பூர் வன்முறையில் இரு சமூகத்திலும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அரங்கேறியுள்ளன. அந்த வகையில் கடந்த மே 4ம் தேதி ஆண்கள் கும்பலால் குக்கி சமூகத்தைச் சேர்ந்த 2 பெண்கள் நிர்வாணமாக அழைத்து செல்லப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பான வீடியோ கடந்த சில நாட்களுக்கு முன் வெளியாகி நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் பூதாகரமான நிலையில் நாடாளுமன்றத்தில் மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் நேற்று மணிப்பூர் சென்றனர். வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூரில் களநிலவரத்தை ஆய்வு செய்ய எதிர்க்கட்சிகளின் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் 20 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்தியா கூட்டணியில் உள்ள 16 கட்சிகளைச் சேர்ந்த 20 எம்.பி.க்கள் நேற்று டெல்லியில் இருந்து விமானம் மூலம் மணிப்பூர் சென்றனர்.

அவர்கள் அனைவரும் மணிப்பூரில் வன்முறை நடைபெற்ற பகுதிகளில் கள ஆய்வு மேற்கொள்கின்றனர். ஆய்வுக்கு பின்னர், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அனைவரும் இன்று மணிப்பூர் கவர்னரை சந்திக்க உள்ளனர். மணிப்பூர் பயணத்தை முடித்த பின் டெல்லி திரும்பும் எம்.பி.க்கள் கள ஆய்வில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதி கோர உள்ளனர். நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள்அனைவரும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்து மணிப்பூர் கள நிலவரம் குறித்து நாட்டு மக்களிடம் தெரிவிக்க உள்ளனர்.

மணிப்பூர் செல்லும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குழுவில் காங்கிரஸ் எம்.பி. ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. சுஷ்மிதா தேவ், தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி, விடுதலைச் சிறுத்தைகள் எம்.பி. ரவிக்குமார் உள்பட 20 எம்.பி.க்கள் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் - பட்டாசு கடையில் ஏற்பட்ட விபத்தில்

## உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 30–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பட்டாசுக் கடையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அளித்துள்ளார்.

இது தொடர்பான – முதல்வரின் அறிக்கை வருமாறு:–

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், பழையபேட்டை நகரம், நேதாஜி ரோடு, போகனப்பள்ளி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசுக் கடையில் நேற்று (29.7.2023) காலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எட்டு பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு துரிதப்படுத்த உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களை அனுப்பி வைத்துள்ளேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்குச் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.